सत्यमेव जयते

भारत का राजपत्र

# The Gazette of India

इந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सनिवार, 17 मार्च, 2001/1921 सका

New Delhi, Saturday, 17th March 2001/1921 Saka

புது தில்லி, 2001 மார்ச்சு 17 சனிக்கிழமை 1921 சக


**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

(சட்டமியற்றுத் துறை)

The Translation in Tamil of The Narcotic Drugs and Psychotropic Substances Act, 1985 (61 of 1985), The General Clauses Act, 1897 (10 of 1897), The Central Boards of Revenue Act, 1963 (54 of 1963), and The Remittances of Foreign Exchange and Investment in Foreign Exchange Bonds (Immunities and Exemptions) Act, 1991 (41 of 1991) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

மயக்க மருந்துப் பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் சட்டம், 1985 (61/1985), பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1897 (10/1897), மைய வருவாய் வாரியங்கள் சட்டம், 1963 (54/1963), அயல்நாட்டுச் செலாவணிச் செலுத்தங்கள் மற்றும் அயல்நாட்டுச் செலாவணி பிணைமுறிகளில் முதலீடு செய்தல் (காப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகள்) சட்டம், 1991 (41/1991) ஆகியவற்றின் தமிழ்மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன் பிரிவு 2 இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**[ Price : Rs. 75.00**

# அயல்நாட்டுச் செலாவணிச் செலுத்தங்கள் மற்றும் அயல்நாட்டுச் செலாவணி பிணைமுறிகளில் முதலீடு செய்தல் (காப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகள்) சட்டம், 1991

(சட்ட எண் 41/1991)

[1991, செப்டம்பர் 18]

அயல்நாட்டு செலாவணியில் செலுத்தங்களைப் பெறுகிற நபர்களுக்கும், அயல் நாட்டுச் செலாவணி பிணைமுறிகளைச் சொந்தமாக வைத்துள்ள நபர்களுக்கும் குறித்த சில காப்புரிமைகளுக்கும், அத்தகைய செலுத்தங்கள் மற்றும் பிணைமுறிகள் தொடர்பான நேர்முக வரிகளிலிருந்து குறித்தசில விலக்களிப்புகளுக்கும் அத்துடன் தொடர்புற்ற அல்லது அதற்கு சார்வுறுவான பொருட்பாடுகளுக்கும் வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.

மிச்சக் கையிருப்பினைச் செலுத்தும் நிலை தொடர்பான இடர்ப்பாடு இருப்பதாலும், அதிகமான அயல்நாட்டுச் செலாவணி வந்துசேருவதை ஈர்ப்பது தேவையாக இருப்பதாலும்;

மற்றும் அத்தகைய அயல்நாட்டுச் செலாவணி வந்து சேருவதை ஈர்க்கும் நோக்குடன், அயல்நாட்டு செலாவணியில் சொல்லப்பட்ட செலுத்தங்களைப் பெறுவதற்கு குறித்த சில நபர்களை இயல்விக்கும் பொருட்டும், சொல்லப்பட்ட பிணைமுறிகளைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கும் வகைசெய்வது உகந்ததாக இருப்பதாலும்;

இந்திய குடியரசின் நாற்பத்து இரண்டாம் ஆண்டில் நாடாளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

## அத்தியாயம் I

## முன்னுரை

குறுந்தலைப்பும் அளாவுகையும்.

1. (1) இந்தச் சட்டம், அயல்நாட்டுச் செலாவணிச் செலுத்தங்கள் மற்றும் அயல் நாட்டுச் செலாவணி பிணைமுறிகளில் முதலீடு செய்தல் (காப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகள்) சட்டம், 1991 என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும்.

## அத்தியாயம் II

## அயல்நாட்டுச் செலாவணிச் செலுத்தங்கள்

பொருள் வரையறைகள்.

2. இந்த அத்தியாயத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

43/1961

(அ) “பெற்றுக்கொள்பவர்” என்பது, வருமான வரிச் சட்டம், 1961 இன் பிரிவு 2 இன் கூறு (31) இல் பொருள்வரையறை செய்யப்பட்டவாறு இந்த அத்தியாயத்தின்படி பணச்செலுத்தம் எதையும் பெற்றுக்கொள்கிற ஒரு நபர் என்று பொருள்படும்.